FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364115

1. District : Thiruvallur PS: VOAC, Year: 2026 FIR No.: 04/AC/2026 TVL Date:
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள் 23.03.2026 17.00 hrs

2. (i) Act சட்டம்: The Prevention of Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Corruption Act 1988 as Sections பிரிவுகள்: 7(a), 13(1)(d) r/w 7(a)
(iii) Act சட்டம்: Amended by the Prevention of Corruption Amendment Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from நாள் முதல் : 13.03.2026 at 14.30 hrs by A-1
குற்ற நிகழ்வு நாள் நாள் வரை : After two days from 13.03.2026 by A-2
Time Period : Time from : Time to : over cell phone.
நேர அளவு நேரம் முதல் : 10.03.2026 at நேரம் வரை : 13.15 hrs by A-1 & A-2.

1. SEEN R. Kalaiyarasy 24/03/26

(b) Information Received at PS. Date : Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.03.2026 நேரம் 14.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 23.03.2026 நேரம் 14.00 hrs & 17.00 hrs.

4. Type of Information : Written/ Oral / Electronic form : Oral statement, given by the complainant
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் and recorded by me as complaint.

2. SEEN 24.03.2026

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: North East, 50 kms.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : O/o the Village Administrative officer,
முறைக் காவல் எண் முகவரி Thandalacheri, Gummidipoondi Taluk, Thiruvallur District.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tmt. E. Salammal (b) Father's/ Husband's Name : Ezhumalai
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 52 yrs (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Housewife, (g) Address : No. 113, Perumal koil street,
தொழில் முகவரி Poorivakkam, Uthukkottai Taluk, Thiruvallur District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

(1) Prabhu, Village Administrative officer, Thandalacheri, Gummidipoondi Taluk, Thiruvallur District.
(2) Babu (private individual), Thandalacheri village.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

by the complainant.

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet If necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : Demanded Rs. 50,000/- as bribe to take necessary action and issuing patta.
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. If any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, If required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet attached.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.தஅ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

23.3.2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. Mala
Rank: நிலை Inspector of Police
No: எண்

24.03.2026 at 9.45 hrs

WPC, Thirumalleer.

(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.04/AC/2026/TVL, U/s. 7(a), 12 r/w 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption Amendment Act, 2018 continues . . .)

பணிந்து அனுப்பப்படுகிறது. திருமதி.சாலம்மாள் வயது 52, க/பெ.ஏழுமலை, எண்.112, பெருமாள் கோவில் தெரு, பூரிவாக்கம் ஊத்துக்கோட்டை தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் என்பவர் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு இன்று 23.03.2026-ம் தேதி மதியம் 02.00 மணிக்கு ஆஜராகி வாய் மொழியாக கொடுத்த புகார் வாக்குமூலம். நான் மேற்படி முகவரியில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனது கணவர் ஏழுமலை விவசாய வேலை பார்த்து வருகிறார். எங்களுக்கு 2 மகள்கள், 1 மகன் உள்ளார்கள், என்னுடைய பிறந்த ஊர் கும்மிடிப்பூண்டி தாலுக்கா,தண்டலச்சேரி கிராமம் ஆகும், என் உடன் பிறந்தவர்கள் 6 சகோதரிகள். எங்களுடைய பூர்வீக சொத்து தண்டலச்சேரி கிராமத்தில் பழைய சர்வே எண் 38/3A ல் சுமார் 56 சென்ட் நிலம் எங்களுடைய அப்பாவிற்கும் அவரின் உடன்பிறந்தவர்களுக்கும் இருந்தது, அதற்கான பட்டா சித்தப்பா பழனிநாயக்கர் பெயரில் பட்டா எண் 57 ஆக இருந்தது. பாகப்பிரிவினை எதுவும் செய்யப்படாத நிலையில், எங்களது சித்தப்பா பழனி அவர்கள் 48 சென்ட் நிலத்தை வள்ளியம்மாள் என்பவருக்கு 1992 ஆம் ஆண்டில் விற்பனை செய்துவிட்டார். தற்போது, அந்த 48 சென்ட் நிலத்தை புருஷோத்தமன என்பவர் வாங்கியுள்ளார். பட்டா எண் 1504 ன் படி புருஷோத்தமன் என்பவர் பெயரில் பட்டா உள்ளது. அதில் எங்களுக்கு உரிய நிலமும் சேர்ந்துள்ளது. எனவே பத்திரம் பதிவு செய்யப்பட்ட நிலம் போக மீதம் உள்ள 7 சென்ட் நிலத்தை, நானும் என்னுடன் பிறந்த சகோதரிகள் மற்றும் எங்கள் அம்மா அனைவரும் சேர்ந்து எனது மூத்த சகோதரியான சுசீலாவின் கணவர் முருகன் அவர்களுக்கு விற்பனை செய்து, அவருடைய பெயருக்கு ஆவண எண் 3517/2006 ன் படி கும்மிடிப்பூண்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு செய்து கொடுத்தோம். அதற்கான பட்டா என்னுடைய அக்கா கணவரின் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்படாமல் இருந்தது. என்னுடைய அக்கா கணவருக்கு வயது முதிர்வு காரணமாக உடல்நிலை சரியில்லாததால், என் அக்கா கணவர் நிலத்திற்கான பட்டா மாற்றம் தொடர்பான வேலைகளை செய்து, பட்டாவை அவர் பெயரில் மாற்றி தருமாறு என்னிடம் கேட்டார். எனவே கடந்த 13.02.2026 ஆம் தேதியன்று, ஆன்லைனில் விண்ணப்பம் செய்தோம். அதன்பின்னர் நான் இரண்டு மூன்று முறை தண்டலச்சேரி கிராம நிர்வாக அலுவலர் பிரபு அவர்களை சந்தித்து எனது அக்கா கணவர் பெயரில் பட்டா மாற்றம் செய்து தருமாறு கேட்டேன். 13.03.2026 ஆம் தேதி மதியம் சுமார் 2.30 மணியளவில் நான் தண்டலச்சேரி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் சென்று, கிராம நிர்வாக அலுவலர் பிரபு அவர்களை சந்தித்த போது அவர், பட்டா மாற்றம் செய்வதற்காக ஒரு லட்சம் ரூபாய் கொடுத்தால் நடவடிக்கை எடுத்து பட்டா கொடுப்பதாக கூறினார். எங்களால் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது என அவரிடம் தெரிவித்துவிட்டு வந்துவிட்டேன். அதன்பின்னர் இரண்டு நாட்கள் கழித்து ஒருநாள்

(FIR contents, continues to next page.....)

Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.04/AC/2026/TVL, U/s. 7(a), 12 r/
7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention
Corruption Amendment Act, 2018 continues . . .)

மாலை, தண்டலச்சேரி கிராமத்தை சேர்ந்த பாபு என்பவர் எனக்கு போன் செய்து கிராம நிர்வாக அலுவலர் பிரபு அவர்கள் பேச சொன்னதாக பேசினார். அவர் ரூ.70,000/- கொண்டு வந்து என்னிடம் கொடுங்கள், கிராம நிர்வாக அலுவலர் பிரபு அவர்கள் வேலையை முடித்து பட்டா கொடுத்து விடுவார் என சொன்னார். நான் அவரிடம் நேரில் வந்து பார்ப்பதாக தெரிவித்தேன். அதன்பின்னர் 20.03.2026 ஆம் தேதி மதியம் 1.15 மணியளவில் தண்டலச்சேரி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் சென்ற போது, கிராம நிர்வாக அலுவலர் பிரபு அவர்கள் அலுவலவகத்தில் இல்லை. நான் பாபு அவர்களுக்கு போன் செய்து கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் இருக்கிறேன் என சொன்னேன். சிறிது நேரத்தில் அங்கு வந்த பாபு என்பவர், கிராம நிர்வாக அலுவலர் பிரபு அவர்கள் ரூ.70,000/- கேட்க சொன்னதாக என்னிடம் சொன்னார். மேலும் அவர் கிராம நிர்வாக அலுவலர் பிரபு அவர்களுக்கு போன் செய்து நான் வந்துள்ள தகவலை சொல்லிவிட்டு, போனை என்னிடம் கொடுத்து பேச சொன்னார், நான் கிராம நிர்வாக அலுவலர் பிரபு அவர்களிடம், பாபு என்பவர் நீங்க சொன்னதாக ரூ.70,000/- கேட்கிறார் என சொன்னபோது, நான் தான் உங்களுக்கு போன் பண்ணி கேட்க சொன்னேன், பணத்தை கொண்டு வந்து அவரிடம் கொடுத்துவிடுங்கள் என சொன்னார். நான் என்னால் அவ்வளவு பணம் ஏற்பாடு பண்ண முடியாது என சொன்னேன். அதற்கு கிராம நிர்வாக அலுவலர் பிரபு அவர்கள், கேட்ட பணத்தை எடுத்து வந்து கொடுத்துடுங்க, வேலையை முடிச்சு தந்துடுறேனு சொன்னார். அவர் லஞ்சமாக தான் பணம் கேட்கிறார் என தெரிந்துகொண்டேன். நான் வேறு வழியில்லாமல் ரூ.50,000/- கொண்டு வருதாக அவரிடம் சொன்னேன். அவரும் சரி என்று சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டார். அதன்பின்னர் பாபுவும் என்னிடம் ரூ.50,000/- எடுத்துட்டு வந்துடுங்கனு சொன்னார். மேலும் புதுசா ஆன்லைனில் ஒரு விண்ணப்பம் அப்ளை பண்ணுமாறு சொன்னார். நானும் சரினு சொல்லிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். வீட்டிற்கு வந்ததும் என் அக்கா கணவர் முருகன் அவர்களிடம் பட்டா மாற்றம் செய்து கொடுக்க தண்டலச்சேரி கிராம நிர்வாக அலுவலர் பிரபு அவர்கள் லஞ்சமாக பணம் ரூ,50,000/- கேட்கிறார் என சொன்னேன். என் அக்கா கணவர் முருகன் அவர்களுக்கும் எனக்கும் லஞ்சமாக பணம் கொடுத்து, பட்டாவில் பெயர் மாற்றுவதற்கு விருப்பம் இல்லை. நானும் என் அக்கா கணவர் முருகனும் இதுப்பற்றி லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் அளிக்கலாம் என முடிவு செய்தோம். பாபு அவர்கள் புதிதாக விண்ணப்பம் செய்ய சொன்னதால், 21.03.2026 ஆம் தேதியன்று மீண்டும் ஒரு விண்ணப்பம் ஆன்லைன் மூலம் செய்தேன். இன்று 23.03.2026ஆம் தேதி பணம் ரூ,50,000/- ரெடி பண்ணிகொண்டு, நான் புகார் கொடுப்பதற்காக திருவள்ளூர் வந்த போது, மதியம் சுமார் 1.45 மணியளவில் பாபு அவர்கள் எனக்கு போன் செய்து, கிராம நிர்வாக அலுவலர் "நான்

(FIR contents, continues to next page.....)

Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.04/AC/2026/TVL, U/s. 7(a), 12 r/w 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption Amendment Act, 2018 continues . . .)

வரவில்லையா என கேட்டதாகவும், இன்னைக்கு வர சொன்னோமே வரலையானு" கேட்டார். நான் அவரிடம் பணம் ரெடி பண்ண லேட் ஆகிவிட்டது என்றும் நாளை காலை வருவதாக சொன்னேன். அதன்பின்னர் 23.03.2026 ஆம் தேதி மதியம் 02.00 மணிக்கு திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகம் வந்து, பட்டாவில் பெயர் மாற்றம் செய்து கொடுக்க லஞ்சமாக பணம் கேட்ட தண்டலச்சேரி கிராம நிர்வாக அலுவலர் பிரபு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டு வாய்மொழியாக புகார் செய்தேன். தண்டலச்சேரி கிராம நிர்வாக அலுவலர் பிரபு அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.50,000/- கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தேன். தங்களுடைய சட்டப்படியான நடவடிக்கைக்கு முழு ஒத்துழைப்பு கொடுப்பேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு தமிழ் படிக்க தெரியும் சரியாக எழுத தெரியாது. என்பதால், நான் எனது புகாரை வாய்மொழியாக சொல்ல சொல்ல காவல் ஆய்வாளர் ஆகிய தாங்கள் கம்பியூட்டரில் ஒரு புகார் வாக்குமூலமாக டைப் செய்து பிரிண்ட் எடுத்து, எனக்கு படித்து காண்பித்தீர்கள். நான் சொன்னபடி சரியாக உள்ளது. Sd XXX சாலம்மாள் 23.3.2026. Madam, The oral statement of the complainant was recorded by me. SdXXX(S.Mala), Inspector of Police, V&AC, Thiruvallur. 23.03.2026. Honoured Madam, The oral statement of the complainant was recorded by me at about 14.00 hrs to 14.45 hrs and after getting proper permission from DVAC on this complaint enquiry is conducted in a discreet manner. Based on the outcome of the enquiry, the antecedents of the accused, the reputation of the accused and genuineness of the complainant are verified. Since, there is prima-facie made out to register a FIR on said complaint. Hence, I registered a case in Thiruvallur V&AC, Cr.No.04/AC/2026/TVL u/s. 7(a), 12 r/w 7(a) of The Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption Amendment Act 2018 at about 17.00 hrs on 23.03.2026.

The original complaint and FIR are sent to the court of the Honourble Principal District and Sessions Judge, Thiruvallur and the other copies to the concern officers of DVAC.

S. Mala 23/03/2026

(S.MALA),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Thiruvallur.